# இடம் பொருள் கலைஞர்

107

மகிழவன்

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து, இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் டாக்டர் முத்துலட்சுமி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டம்!



# டாக்டர் முத்துலட்சுமி

## நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டம்!

மகப்பேறு கால கர்ப்பிணிகள் இறப்பு விகிதத்தில், இந்திய சராசரி ஒரு லட்சத்திற்கு 90 பேர் என்றால், தமிழ்நாட்டில் 39.4-ஆக குறைக்கப்பட்டுள்ளது. அதேபோல 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இறப்பு விகிதமும் தமிழ்நாட்டில் 7.7 என்ற அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது பல ஐரோப்பிய நாடுகளுக்கு நிகரானது, தமிழ்நாட்டின் இந்த முன்னேற்றம். இதற்கு மிக முக்கிய காரணம், தமிழ்நாட்டில் மருத்துவர்கள்- மருத்துவமனை எண்ணிக்கையை, திராவிட மாடல் ஆட்சியாளர்கள் அதிகப்படுத்தியது மட்டுமல்ல, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் மருத்துவமனையில் குழந்தைகள் பிறப்பது 100% என்ற இலக்கு எட்டப்பட்டுள்ளது. அந்த இலக்கை எட்ட துணைநின்ற மிக முக்கிய திட்டம் 'டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு நிதியுதவித் திட்டம்'. நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

### கருவுற்ற மகளிர் நிதியுதவித் திட்டம்

கருவுற்ற பெண்களுக்கு ஊட்டச்சத்து மிகவும் இன்றியமையாதது. ஆனால், வறுமையின் காரணமாக, கருவுற்ற பெண்கள் போதுமான அளவு ஊட்டச்சத்து உணவுகளைப் பெறமுடியாத சூழல் உருவாகிறது. அவர்கள் தொடர்ந்து உழைக்கவும் இயலாத சூழலில், உதவி செய்யும் கருணை உள்ளத்துடன், ஏழ்மையில் தவிக்கும் கருவுற்ற பெண்களுக்கு எட்டாவது மாதத்திலிருந்து அவர்கள் குழந்தை பெறும் வரையிலும், மேலும் குழந்தை பிறந்த பின் இரண்டு மாத காலத்திற்கும், மாதம் ரூ.50/- உதவித் தொகை வழங்கும் திட்டத்தைத் தீட்டி, நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டது கலைஞர் தலைமையிலான அரசு

இந்தியாவின் முதல் பெண் மருத்துவரும், தேவதாசி முறையை ஒழித்துக் கட்ட போராடியவருமான டாக்டர் முத்துலட்சுமி அவர்களின் பெயரில், 'ஏழைப் பெண்கள் மகளிர் மகப்பேறு உதவித் திட்டத்தை', 1989-ஆம் ஆண்டு கலைஞர் தன் பிறந்த தினமான ஜூன் 3-ஆம் தேதி தொடங்கி, வைத்தார். இந்தத் திட்டத்தின் வழியாக, 1989 முதல் 1990 நவம்பர் 30 வரை, 3 லட்சத்து 53 ஆயிரத்து 161 மகளிருக்கு, ரூ.7.06 கோடி வழங்கப்பட்டது.

### திட்டத்தை முடக்கிய அ.தி.மு.க.

தி.மு.கழக அரசு அறிவித்த சமூகநல, சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் அனைத்தையும் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அரசு வெளிப்படையாக ரத்து செய்யா விட்டாலும், அவற்றை முறையாக அமல்படுத்தாமல் முடக்குவதையே செயல் திட்டமாகக் கொண்டிருந்தது. அப்படியாக டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு உதவித்தொகை திட்டமும் அடுத்து வந்த அ.தி.மு.க. ஆட்சியில் முடக்கப்பட்டது.

### புத்துயிர் பெற்ற திட்டம்

தி.மு.கழக ஆட்சி மீண்டும் அமையுமேயானால், முடக்கப்பட்ட டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு உதவித் திட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு, விரிவுபடுத்தி கருவுற்ற தாய்மார்களுக்கு உதவித்தொகை ரூபாய் 500 அளவிற்கு உயர்த்தப்பட்டு வழங்கப்படும் என 1996-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் அறிவித்தார் கலைஞர்.

அதன்படி அதே சட்டமன்றத் தேர்தலில் பெருவாரியான வெற்றி பெற்று ஆட்சியில் அமர்ந்த கழக அரசு, டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தை மீண்டும்



நடைமுறைக்குக் கொண்டு வந்தது. லட்சக்கணக்கான மகளிர் பயன்படும் வகையில், செயல்படுத்தியது.

ஆனால் 2001-ஆம் ஆண்டு அமைந்த அ.தி.மு.க. அரசு, திட்டத்தை மீண்டும் முடக்கியது. 2006-ஆம் ஆண்டு ஐந்தாம் முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், பேரறிஞர் பெருந்தகை அண்ணா பிறந்த தினத்தில் 15.09.2006 அன்று உதவித்தொகையை 6 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி மீண்டும் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு அவர்கள் கருவுற்ற ஏழாவது மாதத்தில் முதல் தவணையாக 3 ஆயிரம் ரூபாயும், குழந்தை பிறந்தவுடன் இரண்டாவது தவணையாக 3 ஆயிரம் ரூபாயும் இத்திட்டத்தின் கீழ் 2011 - ஆம் ஆண்டு வரை 25 இலட்சத்து 76 ஆயிரத்து 612 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 1,389 கோடியே 42 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. பின்னர், இருமுறை உதவித்தொகை உயர்த்தப்பட்டு, 2017-இல் தனியார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், இலவச சுகாதார சேவைகளைப் பெறுபவர்களுக்கும் திட்டம் நீட்டிக்கப்பட்டது.

### உயர்த்தப்பட்ட உதவித் தொகை

'திராவிட மாடல் அரசு' அமைந்த பிறகு திட்டத்தை மேலும் மேம்படுத்தும் நோக்கில், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தை ஒன்றிய அரசின் பிரதம மந்திரி 'மாத்ரு வந்தனா யோஜனா-2.0' திட்டத்தையும் ஒருங்கிணைத்துப் புதுப்பித்து, அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

இதன் தொடர்ச்சியாக மாநில அரசு 15,000 ரூபாயும், ஒன்றிய அரசு 3,000 ரூபாயும் என மொத்தம் ரூ.18,000-ஆக உதவித்தொகை உயர்த்தப்பட்டு, கர்ப்பிணிப் பெண்களுக்கு கருத்தரித்த 12 வாரத்துக்குள் ஆரம்ப சுகாதார செவிலியர்களிடம் ஆதார் அட்டை, வங்கிக் கணக்கு எண் விவரங்களைத் தெரிவித்து, பெயரைப் பதிவு செய்தவுடன் 2 ஆயிரம் ரூபாய் வரவு வைக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, நான்காவது மாதத்துக்குப் பின்னர் இரண்டாவது தவணையாக ரூபாய் 2 ஆயிரமும், இதற்கிடையில், உடல் திறனை

**இன்றைய ஒன்றிய அரசின் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் சுகாதாரக் கட்டமைப்பில் தமிழ்நாடு சிறந்து விளங்குவதற்கு இத்தகைய சமூக நலத் திட்டங்களே காரணம். அதற்கான விதையை விதைத்தவர் கலைஞர் என்பதை எவரும் மறுத்திட இயலாது.**

மேம்படுத்தும் வகையில், சத்துமாவு, இரும்புச்சத்து டானிக், உலர் பேரீச்சை, பிளாஸ்டிக் கப், பக்கெட், ஆவின் நெய், அல்பெண்டாசோல் மாத்திரை, கதர் துண்டு அடங்கிய ரூபாய் 2 ஆயிரம் மதிப்பிலான பெட்டகம் இரண்டு முறையும் வழங்கப்படுகின்றது.

அரசு மருத்துவமனையில் பிரசவம் முடிந்தவுடன் மூன்றாவது தவணையாக ரூ.4 ஆயிரம், குழந்தைக்குத் தடுப்பூசி போடும் காலத்தில் 4-வது தவணையாக ரூ.4 ஆயிரம், குழந்தைக்கு ஒன்பதாவது மாதம் முடிந்தவுடன் ஐந்தாவது தவணையாக ரூபாய் 2 ஆயிரம் என ரூபாய்.14 ஆயிரம் ரொக்கம் மற்றும் 4 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள ஊட்டச்சத்துப் பெட்டகம் என ரூ.18 ஆயிரம் மதிப்பிலான உதவித்தொகை வழங்கப்படுகிறது. 2006-ஆம் ஆண்டு முதல் இதுநாள் வரை 1.17 கோடி பேருக்கு 10 ஆயிரத்து 529 கோடியே 57 லட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது. இன்றைய ஒன்றிய அரசின் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் சுகாதாரக் கட்டமைப்பில் தமிழ்நாடு சிறந்து விளங்குவதற்கு இத்தகைய சமூக நலத் திட்டங்களே காரணம். அதற்கான விதையை விதைத்தவர் கலைஞர் என்பதை எவரும் மறுத்திட இயலாது.

...வலம் வருவோம்

## யாருக்காக இந்த மௌனம்?

இந்திய வழிபாட்டுத் தலங்கள் சட்டம் -1991 தொடர்பான வழக்கொன்று, உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்தச் சட்டம் உள்ளபடியே தொடர வேண்டுமென, ஏராளமான கட்சிகள் மற்றும் அரசியல் சாசன நிபுணர்கள் உட்பட பலர் வழக்காடி வருகிறார்கள். 2021-ஆம் ஆண்டு தொடுக்கப்பட்ட வழக்கில், இந்த நொடி வரை ஒன்றிய அரசு தனது நிலைப்பாட்டு (Counter) மனுவைத் தாக்கல் செய்யவில்லை. 'மோடி ஆட்சி எதற்காக இந்த மௌனத்தைக் கடைப்பிடிக்கிறது?' என்று கேள்வி எழுப்பி, எழுத்தாளர் சுபகுணராஜன் தனது சமூக வலைத்தளப் பக்கங்களில் பதிவிட்டுள்ளார்.

அவரது பதிவில், "இந்துத்துவ பாசிசம் இந்தச் சட்ட வரையறையைக் காலாவதியாக்க முனைப்பாக இருப்பதாகக் கருத முடியும். அயோத்திக்குப் பின்னர், இதுபோன்ற வழிபாட்டுத்தல சிக்கல்களைக் கையாளும் / கையாளா இந்திய நீதிமன்றங்கள் இந்தச் சட்ட வரையறையையே ஆதாரமாகக் கொண்டுள்ளன.

இதுபோன்ற மிக முக்கியமான ஒரு சட்ட வரையறையில், அரசின் நிலைப்பாடு நேர்மறையாக இருக்கும் பட்சத்தில், நான்கு ஆண்டு காலதாமதம் தேவையற்றது. ஆனால், விளக்கமற்ற தாமதம் மோடி ஆட்சியின் உள்நோக்கத்தைப் புரியவைக்கிறது.

அயோத்தியைப் போல இன்னும் ஒரு நூறு வழிபாட்டுத்தல மோதல்களை உருவாக்கி, அதன் வழியாக இந்துத்துவத்தின் அசைக்க முடியாத பிடியை இறுக்கி விடலாம் என்ற எண்ணம், இதன் பின் ஒளிந்திருப்பது தெரிகிறது. ஏற்கனவே, அது தொடர்பான பல விவகாரங்களை பா.ஜ.க.வின் துணை அமைப்புகள் ஆங்காங்கே உருவாக்கிக் கொண்டிருப்பது ரகசியம் இல்லை. ஹிந்துத்துவப் பெரும்பான்மை எனும் போர்வையில், ஒளிந்துகொண்டு அதிகார வெறியாட்டம் நடத்தத் துடிக்கும் ஒரு சிறு சனாதன கூட்டத்தின் சதிச் செயல் இது. முன்னாள் தலைமை நீதிபதி சந்திர சூட் போல, 'கடவுளின் கட்டளையைப் பெற்று, ஏற்று நீதியாக' வழங்கும் இன்னொரு தலைமை நீதிபதிக்காக காத்திருக்கிறதா இந்த அரசு?' என்று காத்திரமாகக் கேள்வி எழுப்பியுள்ளார் அவர்.

## :.ப்ளாஷ்பேக்





பொள்ளாச்சி சதீஷ்

### பெரியார் சிலையை உயர்த்திப் பிடித்த பேராசிரியர்!

2014-ஆம் ஆண்டு பொள்ளாச்சி மக்களவைத் தொகுதி வேட்பாளர் அண்ணன் பொங்கலூர் ந.பழனிசாமி அவர்களை ஆதரித்து, தேர்தல் பிரச்சாரம் செய்வதற்காக, இனமானப் பேராசிரியர் அவர்கள் வருகை புரிந்தார். அப்போது, அவருக்கு அன்பளிப்பாக தந்தை பெரியார் அவர்களின் சிலையை வழங்கினேன். பெட்டிக்குள் இருந்த பெரியார் சிலையைப் பார்த்த மகிழ்ச்சியில், மேடைக்குக் கீழ் உள்ளோருக்கும் தெரியட்டும் என அவரது கரங்களினாலே சிலையை உயர்த்திக் காண்பித்தது, மறக்க முடியாத நிகழ்வு. முன்னாள் அமைச்சர் அண்ணன் மு.கண்ணப்பன், அப்போதைய பொள்ளாச்சி நகரச் செயலாளர் 'தென்றல்' செல்வராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

**- பொள்ளாச்சி சதீஷ், மாவட்டத் துணை அமைப்பாளர், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, கோவை தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### திராவிடச் சிந்தனை எழுச்சி!


1939-ஆம் ஆண்டுக்குப் பிறகு, சுயமரியாதை இயக்கத்தில் மாணவர்கள் பங்கேற்பு மிகத் தீவிரமாக இருந்தது. 1937-40 வரையிலான முதலாம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு பிறகு, 'நீதிக்கட்சி' தமிழ் இயக்கமாக மாறியது. தந்தை பெரியாரிடத்தில் ஈர்க்கப்பட்டவராக இருந்தால், அவர்களின் பிள்ளைகள் அறிஞர் அண்ணா அவர்களால் ஈர்க்கப்பட்டவர்களாக இயக்கப் பணியாற்ற தொடங்கினர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

755

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131